| A.S.No. 40/2018 | PW1:திரு.ஏழுமலை த/பெ. திரு.முனுசாமி | 28-10-2025 |
|---|---|---|

**<u>சாட்சி மனுவின்பேரில் மனு அனுமதிக்கப்பட்டு திரும்ப அழைக்கப்பட்டு 2ம் எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பு குறுக்குவிசாரனை. சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.</u>**

வ.சா.ஆ.1 24ல் கண்டுள்ள வழக்கு முச்சந்தி தாக்கல் செய்த வழக்காகும். அந்த வழக்கிற்கான சர்வேஎண்கள் தெரியாது. அந்த வழக்கில் முச்சந்திக்கு சொத்து எப்படி வந்தது என்றால் எனது தந்தை சம்பாதித்த சொத்தாகும். எனது தந்தை வாதி முச்சந்திக்கு கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொடுத்தாரா என்றால் இல்லை. எனது தந்தை கிரைய ஒப்பந்தத்தை நிறைவேற்ற தவறியதால் முச்சந்தி எனது தந்தைக்கு எதிராக வழகக்கு தாக்ல செய்து தீர்ப்பாணை பெற்று அதன் பேரில் சுவாதீனம் பெற்றார் என்று சொன்னால் சரியல்ல. முச்சந்தி ஏற்கனவே தாக்கல்செய்த வழக்கில் குறிப்பிட்டுள்ள 23 அயிட்ட சொத்துக்களை இந்த மேல்முறையீட்டு வழக்கில் சொத்துக்களாக காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அதற்கும், இதற்கும் சம்மந்தமில்லை. 10, 19, 21 அயிட்ட சொட்ததுக்களை இந்த வழக்கில் நான் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அ.வ.எண்.117/2015 வழக்கில் என்ன தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. அந்த தீர்ப்பில் எனது வழக்கு காலாவதிதோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அ.வ.எண்.117/2015 வழக்கிற்கு முன்னரே இந்த வழக்கில் தீர்ப்பாகிவிட்டது என்று சொன்னால் சரியல்ல. மேல்முறையீட்டு வழக்கினை காலம்கடத்த வேண்டும் என்ற எண்ணத்திலேயே இவ்வழக்கிற்கு சம்மந்தம் இல்லாத ஆவணங்களை தாக்கல் செய்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.10.28 19:12:43 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**